செ.வெ.எண்.23/அக்டோபர் நாள் :11.10.2018

# பத்திரிகைச் செய்தி

தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினரால் நடத்தப்படும் பொது விநியோகத்திட்ட நியாய விலைக் கடைகளில் நுகர்வோருக்கு, முறையாக பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தவும், பிற குறைகள் தொடர்பாகவும் வட்ட அளவிலான குறைதீர்ப்பு முகாம்கள், கீழ்க்கண்ட கிராமங்களில் வரும் 13.10.2018 சனிக்கிழமையன்று காலை 10.00 மணியளவில் நடத்தப்பட உள்ளது. இம்முகாமில் வட்ட வழங்கல் அலுவலர்கள், கூட்டுறவு சார் பதிவாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், தனி வருவாய் ஆய்வாளர்கள் சம்மந்தப்பட்ட நியாய விலைக் கடை விற்பனையாளர் ஆகியோர் கலந்து கொள்வார்கள். முகாம் நடைபெறும் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையில் பொருட்கள் பெறுவோர் அவர்களுடைய குறைகளை மனுக்களாக இம்முகாமின் தலைவரான வட்ட வழங்கல் அலுவலரிடம் கொடுத்து தங்களது குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். சம்மந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் மனுவில் குறிப்பிடப்படும் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வார். இம்மாதம் 13.10.2018-ம் நாளன்று கீழ்க்கண்ட நியாய விலைக் கடைகள் அமைந்துள்ள கிராமங்களில் குறைதீர்ப்பு முகாம்கள் காலை10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும்.

| வ. எண் | வட்டத்தின் பெயர் | கடையின் பெயர் | தேதி | வட்ட வழங்கல் அலுவலரின் கைப்பேசி எண்கள். |
|---|---|---|---|---|
| 1 | தருமபுரி | கிருஷ்ணாபுரம் | 13.10.2018 | 9445000217 |
| 2 | பென்னாகரம் | கிழக்கு ஹேமனூர் | 13.10.2018 | 9445000218 |
| 3 | பாலக்கோடு | கருக்கனஅள்ளி | 13.10.2018 | 9445000219 |
| 4 | அரூர் | செல்லம்பட்டி புதூர் | 13.10.2018 | 9445000220 |
| 5 | பாப்பிரெட்டிப்பட்டி | B.பள்ளிப்பட்டி கடைஎண்.2 29EP092PN | 13.10.2018 | 9445000221 |
| 6 | நல்லம்பள்ளி | தொம்பரகாம்பட்டி | 13.10.2018 | 9629668143 |
| 7 | காரிமங்கலம் | பூமாண்டஅள்ளி | 13.10.2018 | 9500690302 |

பொதுமக்கள் மேற்படி முகாம்களில் கலந்து கொள்வதன் மூலம் வாய்ப்பினை பயன்படுத்தி பொது விநியோகத்திட்டம் தொடர்பான தங்களது குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். எனவும் பொது விநியோகத்திட்டம் சிறப்புடன் செயல்பட ஒத்துழைப்பினை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக கூடுதல் விபரங்களைப் பெற மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் (24X7) கட்டணமில்லா தொலைபேசி "1077" மற்றும் 8903891077 மூலம் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- வெளியீடு :-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி**